# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## MC.No. 8 / 2024

## PW-1

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் நாள் வியாழன் கிழமை மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3 ன் படி 16.10.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | குணசுந்தரி | **பணி** | : | வீட்டுக்குடித்தனம் |
| **க /பெ.** | : | சுரேஷ்குமார் | **வசிப்பிடம்** | : | தலைவாசல் |
| **வயது** | : | 33 | **வட்டம்** | : | ஆத்தூர் |

**முதல் விசாரணை**:

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| **ம.சா.ஆ.1** | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.02.2022 அன்று நடந்த திருமணத்தின் திருமண அழைப்பிதழ் அசல் |
| **ம.சா.ஆ.2** | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (**அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது**). |
| **ம.சா.ஆ.3** | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 05.07.2023 அன்று பெண் குழந்தை பிறந்ததற்கான பிறப்பு சான்றிதழின் நகல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(எதிர்மனுதாரர் ஆஜரில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரும் ஆஜரில்லை, எனினும் எதிர்மனுதாரருக்கு வாய்ப்பளிப்பதற்காக குறுக்கு விசாரணைக்காக வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது.)**